1970 பிப்ரவரி 28]

தஞ்சாவூர் மாவட்டத்தில் கயிறு தொழிற்சாலை

*** 142 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் நார்-கயிறு தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நார் கயிறு தொழிற்சாலை நிறுவுவதற்காக அனுமதிக்கப்பட்டிருப்பது தனியார்த் துறையிலா? அல்லது கூட்டுறவுத் துறையிலா? தஞ்சை மாவட்டத்தில் எந்த இடத்தில் நிறுவ அனுமதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட தொழிற்சாலை தஞ்சை மாவட்டத்தில் அரசாங்க உதவியுடன் பட்டுக்கோட்டையில் நிறுவப்பட இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, நார்-கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்க தஞ்சை மாவட்டத்தில் தனியார் விண்ணப்பம் செய்திருக்கிறார்களா? அப்படியெனில், எத்தனை விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? எத்தனை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தேங்காய் நாரினால் கயிறு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கென ஒரு தனி அதிகாரியை நியமித்து, இந்தத் தொழிற்சாலை மற்ற மாநிலங்களில் எப்படி இயங்குகின்றது என்பதைக் கண்டுவர அவர் அனுப்பப்பட்டார். அவர் தந்த அறிக்கையிலே 6 அரசுத் துறையிலே மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட் ஆரம்பிக்கலாம் என்றும், தனியார்க்கு 20 மெக்கனைஸ்டு டீஃபைபரிங் டெமான்ஸ்ட்ரேஷன் யூனிட் கொடுக்கலாம் என்றும் தரப்பட்டிருக்கிறது. மொத்தச் செலவு 24 லட்சம் ரூபாய் ஆகும். முதன் முதலிலே தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலே இதனை ஆரம்பிக்கலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். தனியார்த் துறைக்கு உதவி செய்வதைப் பற்றிப் பின்னாலே முடிவு செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

Potassium Chlorate Factory

* 143 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a potassium chlorate factory is to be set up in Cudalur near Periyar lower camp under Co-operative sector; and

(b) if so, the estimated cost thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) கூட்டுறவுத் துறையில் "தீப்பெட்டித் தொழில் கூட்டுறவு பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை" என்ற பெயரில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இச் சங்கம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொழிற் சாலையை நிறுவுவதற்கான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. இது விரைவில் முடிவு செய்யப்படும்.

(இ) இத் தொழிற்சாலைக்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகை ஏறக்குறைய ரூ. 30 லட்சமாகும்.

Thiru K. VINAYAKAM : What is the potential capacity of production if this factory comes up and what are the by-products expected? May I know whether arrangements are being made to start such industries also?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 30 லட்சம் ரூபாய் அளவிலே இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட இருக் கிறது. உற்பத்தியளவு பற்றிய குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

Thiru K. VINAYAKAM : Is it a fact that a factory of this type is being contemplated to be opened in Madurai?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தீப் பெட்டித் தொழிற்சாலை எங்கு இருக்கிறதோ, அதற்கு அருகாமை யிலே இதை அமைக்கலாம் என்றிருக்கிறோம். மதுரையிலே ஒரு இடம் பார்த்திருக்கிறோம். இது நகரத்திற்கு அருகாமையிலே இருக்கிறது. இராமநாதபுரம், நெல்லை ஆகிய இரண்டு மாவட்டங் களில் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அருகாமையில் எங்கே அமைக்கலாம் என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்தில் கந்தகம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் தீப் பெட்டித் தொழிற்சாலையை அங்கே அமைக்கலாம் என்று முன்னுள் அரசாங்கம் முடிவு செய்திருந்ததே, அதுபற்றி இப்போதைய அர சாங்கத்தின் முடிவு என்ன? வேதாரண்யத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அது தீப்பெட்டிக்குத் தேவையான மருந்துத் தொழிற்சாலையைப் பற்றியது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்குமிடங்களில் தீப் பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பித்தால், அந்த நெசவாளர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருக்குமே, அத் தகைய முயற்சியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏதேனும் முடிவு செய்திருக்கிறதா?

1970 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட முடிவு எதுவும் செய்யப்படவில்லை.

பவளம் வெட்டி எடுத்தல்

***144 வினா. திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் பவளம் வெட்டி எடுக்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், 1967-69-ம் ஆண்டுகளில் ஆண்டுக்கு எவ்வளவு எடுக்கப்பட்டது? ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Distribution of cloth to Khadi Board employees

*145 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether free cloth distribution has to be made to the employees of the Tamil Nadu Khadi Board this year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) தமிழ்நாடு கதர் வாரியம், காந்தி நூற்றாண்டு விழா, தீபாவளிப் பண்டிகையின் போது, கதர் விற்பனையை அதிகரிக்கவும், குறிக்கோள் அளவாகிய ரூ. 2 கோடி விற்பனை அளவை எய்தவும், ஊக்கமளிக்கும் வகையில், 1969-ம் ஆண்டு தீபாவளியின்போது கதர் வாரியத்தின் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் (சில்லறை நிதியிலிருந்து ஊதியம் பெறும் ஊழியர்கள் உட்பட) ஒவ்வொருவருக்கும் ரூ. 25 மதிப்புக்கு மேற்படாத கதர் துணிகள் இலவசமாக வழங்கத் தீர்மானித்தது. அதன்படி 1969-ம் ஆண்டு, தீபாவளியின்போது ரூ. 86,450 பெறுமானமுள்ள கதர்த் துணிகள் 3,458 பணியாளர்களுக்கு இல வசமாக வழங்கப்பட்டன.

திரு. கே. சகாதேவக் கண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொங்கல் தினத்தன்றும் செயல்படுத்த, இல வசமாகக் கதர் வழங்க சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, காந்தியார் நூற்றாண்டு விழாவையொட்டியும், வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழாவையொட்டியும், மறைந்த பேறிஞர் அண்ணா அவர் களின் 60-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டியும் விசேஷமான முறையில் இலவசக் கதர்த் துணிகள் வழங்கப்பட்டனவே தவிர, ஒவ்வொரு தீபாவளி, பொங்கல் பண்டிகையின்போதும் வழங்கப் படும் திட்டம் அல்ல இது.